தமிழ்நாடு மின்சார வாரியம்

சுருக்கம்

ஓய்வூதியம் - தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வூதியர் நல நிதித் திட்டம், 1995 ஓய்வூதியதாரர் மாதப்பிடித்தம் உயர்த்தியும் மற்றும் மருத்துவ செலவினத்தின் உச்சவரம்பை உயர்த்தியும் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

(செயலகக்கிளை)

(நிலை) வாரியசெயல்முறை ஆணை (தலைவர்) எண். 132 நாள் 16 ஜுலை 2008.

ஆடி.1, சர்வதாரி ஆண்டு,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

<u>பின்வருவனவற்றை படிக்கவும்</u>

1) த.நா.மி.வா. (நிலை) ஆணை (முழு வாரியம்) எண்.23 செயலகக்கிளை, நாள் 2.4.1997.
2) த.நா.மி.வா. (நிலை) ஆணை (முழு வாரியம்) எண்.72 செயலகக்கிளை, நாள் 1.11.1999.
3) த.நா.மி.வா. (நிலை) ஆணை (முழு வாரியம்) எண்.2 செயலகக்கிளை, நாள் 11.1.2002.
4) த.நா.மி.வா. (நிலை) ஆணை (முழு வாரியம்) எண்.39 செயலகக்கிளை, நாள் 24.9.2007.
5) அரசாணை எண்.188 நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 9.5.2008.

-------

<u>ஆணை</u>

பார்வை 1-ல் படிக்கப்பட்டுள்ள ஆணையில் தமிழ்நாடு மின்சார வாரிய ஓய்வூதியம் பெறுவோர் நலநிதி என்ற ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் ஓய்வூதியம் பெறுவோர்க்கு சிறப்புச்சிகிச்சை/அறுவைச்சிகிச்சை மேற்கொள்வதற்காக அந்நிதியிலிருந்து ஓய்வூதியர் மேற்கொள்ளும் சிகிச்சைக்கான மொத்த செலவில் 75% அல்லது ரூபாய் 50,000/- இவற்றில் எது குறைவோ, அத்தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. மேலும் படிக்கப்பட்ட ஆணை 4-ன்படி இத்திட்டத்திற்கு ஓய்வூதியர்களிடமிருந்து தற்பொழுது மாதந்தோறும் ரூபாய்.20/- பிடித்தம் செய்யப்பட்டுவருகிறது.

2. பார்வை-5ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் நலநிதித் திட்டத்திற்கு ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதப்பிடித்தத்தை ரூபாய் 50/- ஆக உயர்த்தியும் மற்றும் மருத்துவ செலவினத்தில் தற்போதுள்ள 75% அல்லது ரூ.50,000/- என்ற உச்சவரம்பை, 75% அல்லது ரூ.1,00,000/- என உயர்த்தியும், இதில் குறைவான தொகை எதுவோ அத்தொகை வழங்க முடிவு செய்து ஆணையிட்டுள்ளது.

www.tnebes.org

3. தமிழ்நாடு அரசின் இந்த ஆணையை வாரியம் நன்கு பரிசீலித்து அதனை, வாரிய ஓய்வுதியர்களுக்கு அமுல்படுத்த முடிவெடுத்துள்ளது. அதன்படி ஓய்வுதியர்களிடமிருந்து மாதப்பிடித்தமாக செய்யப்படும் ரூ.20/-ஐ 1.4.2008 முதல் ரூ.50/-ஆக உயர்த்தியும் மற்றும் மருத்துவச் செலவினத்தில் தற்போது உள்ள 75% அல்லது ரூ.50,000/- என்ற உச்சவரம்பை, 75% அல்லது ரூ.1,00,000/- என உயர்த்தியும் இதில் குறைவான தொகை எதுவோ அத்தொகையை கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்க ஆணையிடப்படுகிறது.

i) இவ்வாணையில் உள்ள உச்சவரம்புத்தொகை ரூபாய் ஒரு இலட்சம், 1.4.2008-க்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் சிகிச்சை மற்றும் அறுவைச்சிகிச்சைக்குத்தான் பொருந்தும்.

ii) 1.4.2008-க்கு முன்னர் மருத்துவச் சிகிச்சை பெற்று ஏற்கெனவே மருத்துவச் செலவில் 75 சதவீதம் அல்லது ரூபாய் ஐம்பதாயிரம் மீளப்பெற்றிருந்தால் அவர்களுக்கு 1.4.2008-க்குப் பின்னர், மேற்கொள்ளப்படும் மருத்துவச்சிகிச்சைக்கு 75 சதவீதம் அல்லது ஏற்கெனவே மீளப்பெற்ற தொகை போக உச்சவரம்புத்தொகை ரூபாய் ஒரு இலட்சத்திற்குட்பட்டும், மிகாமலும், மீதத்தொகை வழங்கப்பட வேண்டும்.

iii) 1.4.2008-க்கு முன்னர் மருத்துவச்சிகிச்சை/அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு 1.4.2008-க்குப் பின்னர் மருத்துவச் சிகிச்சைக்குண்டான மீளப்பெறும் தொகைக்கு மனு அளித்தால், அவ்வினங்களில் சிகிச்சை/அறுவை சிகிச்சை மேற்கொண்ட நாளில் செயலாக்கத்தில் உள்ள ஆணைப்படிதான் மீளப்பெறும் தொகை அளிக்கப்படவேண்டும்.

4. இந்த ஆணை 1.4.2008 முதல் செயலாக்கப்படும்.

5. மற்ற நிபந்தனைகளைப் பொறுத்தவரையில் எந்த மாற்றமும் இல்லை.

(வாரியத்தலைவரின் ஆணைப்படி)

ஆர். கதிர்வேல்,
செயலர்.

பெறுநர்
அனைத்துத் தலைமைப்பொறியாளர்கள்.
தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்/பொது/வருவாய்.
அனைத்துத் மேற்பார்வைப்பொறியாளர்கள்.
தலைமை உட்தணிக்கை அலுவலர்.
துணைத் தலைமைப் பொறியாளர்/நிர்வாகக்கிளை.
அனைத்து துணைச்செயலாளர்கள்/செயலகக்கிளை.
அனைத்து முதுநிலை பணித்தொகுதி அலுவலர்கள்/நிர்வாகக்கிளை.
தன்னகத் தணிக்கை அலுவலர் (மாநில கணக்கு துறைத்தலைவர்).
அனைத்துக் கிளைகள் (தலைமையிடம்).

...3

www.tnebes.org

நகல்

தலைவரின் பார்வைக்கு.
உறுப்பினர் (கணக்கு).
உறுப்பினர் (பகிர்மானம்).
உறுப்பினர் (உற்பத்தி).
காவல்துறை இயக்குநர் (விழிப்புப்பணி)/தமிழ்நாடு மின்சார வாரியம்.
செயலாளர்/ தமிழ்நாடு மின்சார வாரியம்.
சட்ட ஆலோசகர்/ தமிழ்நாடு மின்சார வாரியம்.
தொழில் உறவு ஆலோசகர்.
இயக்குநர்/ தமிழ்நாடு மின்வாரிய பதிப்பகம்.
தலைமை மருத்துவ அதிகாரி/தலைமையிட மருந்தகம்.
அனைத்து அலுவலர்கள்/பிரிவுகள்/செயலகக்கிளை.
உறைவிட மேலாளர்/ தமிழ்நாடு மின்சார வாரியம், புதுதில்லி.
உதவி பணித்தொகுதி அலுவலர்/தமிழ் வளர்ச்சி/ தமிழ்நாடு மின்சார வாரிய இதழில் பிரசுரிப்பதற்காக.
தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், எண்.14 (7) இரண்டாவது மெயின் ரோடு, ராம் நகர், சென்னை-600 082.
தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுதியர் சங்கங்களின் சம்மேளனம், எண்.52, மின் நகர், காஜாமலை, திருச்சி-620 023.
தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுதியர் முன்னேற்ற சங்கம், எண்.9, சுந்தரம் செட்டி வீதி, கொட்டிக்குளம் ரோடு, திண்டுக்கல்-624 001.
தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பு, எண்.27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005.
தமிழ்நாடு மின்வாரிய ஓய்வுபெற்ற ஊழியர் சங்கம், 16, 10-வது கிழக்கு மெயின் ரோடு, காந்தி தெரு, வேலூர்-6.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

www.tnebes.org